

# திறவுகோல்

2057
ஆவணி
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# பால்காரர் எனும் பெருந்துறவி



வழக்கம்போல் நாம் உத்தேசமாக 1995 காலத்தில் பயணிப்போம்...

அடைமழை முடிந்து கார்த்திகை மாதமும் முடிந்து கிட்டத்தட்ட மார்கழி மாத முதலில் அடர் பனி ஆரம்பிக்கும் காலம் அது...

வயதானவர்கள் முதல் நடுத்தர வயது உள்ளவர்கள் வரை ஒரு சால்வை போத்திக் கொண்டுதான் மாலை மற்றும் இரவு பொழுதுகளில் குறிப்பாக அதிகாலையில் வெளியே வருவார்கள்...

உத்தேசமாக காலை 3 மணி இருக்கும் அந்த அடர்ந்த பனியில் எங்கள் ஊர் பால்காரரின் காற்று ஒலிப்பான் சத்தம் தான் (பிப்பி பிப்பி பாம் பாம்) எங்கள் ஊரில் உள்ள சேவலையே எழுப்பி விடும் சத்தம்... ஆனால் சேவல் எழும்பாது... தனக்கான நேரம் வரவில்லை என கூவாமல் திரும்ப உறங்க சென்றுவிடும்.

அந்த சத்தம் அடர்ந்த பனியில் அரை மயில் வரை கிழித்துக்கொண்டு போய் அனைவரையும் எழுப்பும்...

இந்த சத்தம் கேட்டவுடன் இரவு முழுக்க கத்திக் கொண்டிருந்த தவளைகளின் சத்தம் ஓரளவு ஓயும்.

அப்போது அறிவிப்பு மணி என்பதே கிடையாது.

நினைத்துப் பாருங்கள் ஒத்தை குண்டு பல்பு வெளிச்சத்தில் ஒரு சிமெண்ட் கட்டையில் ஊர் முச்சந்தியில் தலையில் கட்டிய முண்டாசுடன் மிதிவண்டியோ அல்லது இருசக்கர வாகனத்தையோ ஓரமாக நிப்பாட்டி விட்டு ஒரு பித்தளைக் குவளையை நீரை வடித்து விட்டு உட்கார்ந்திருப்பார் பால்காரர். கையில் எழுதுகோல் மற்றும் ஒரு காகிதம்...

அங்கே மூன்று மணிக்கு இருக்கிறார் என்றால் அவர் எத்தனை மணிக்கு எழும்பி அங்கு வந்திருக்க வேண்டும்.

பூச்சிகளின் சத்தம் மட்டும் ஆங்காங்கே கேட்கும்... குளிர் துளைத்து எடுக்கும் அவர் எழுப்பிய ஒலி சத்தம் கேட்டு ஒவ்வொரு வீடாக அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்சார விளக்கை போடுவார்கள், மின்சார வசதி இல்லாத சிலர் விளக்கு ஏற்றுவார்கள். தவளை சத்தமும் இரண்டு நாய் மட்டும் குரைக்கும் சத்தம் மட்டும் கேட்டு கொண்டே இருக்கும்..

அதிகபட்சம் பால் கரப்பது பெண்கள் தான் எங்க அம்மா உட்பட.

வீட்டில் உள்ள பெண்கள் தான் ஆண்களை எழுப்பி விடுவார்கள் சிலர் வீட்டில் ஆண்கள் பெண்களை எழுப்பி விடுவார்கள்...

அக்கம் பக்கத்தினர் யாரும் யாரையும் எழுப்பி விட வேண்டிய அவசியமில்லை..

ஏய் எந்திரி பால்காரன் சத்தம் கேட்குது பாரு என்று சொன்னவுடன் .... அதுக்குள்ளயா விடிஞ்சிட்டு என்று பதில் குரல் வரும்..

அந்த சத்தம் கேட்டவுடன் அசை போட்டுக் கொண்டிருந்த மாடும் சற்று சுதாரிக்கும்.... தன் கன்னுக்கும் பல சீவராசிகளுக்கும் பசி தீர்க்க போகிறோம் என்ற பெருமிதத்துடன்...

இன்னும் சிலரோ அந்த சத்தத்திற்காக முன்னரே முழித்து விழித்துக் கொண்டே இருப்பார்கள்..

சில மாடுகள் சிலுப்பும் அதற்காக மூக்கணாங்கயிற்றை பிடித்துக் கொள்ளவும் பால் கறந்த உடன் முச்சந்தியில் உள்ள பால்காரரிடம் கொண்டு போய் கொடுத்து விட்டு வரவும் ஆண்கள் உதவி செய்வார்கள் ..சிறு பிள்ளைகளுக்கு இதில் ஒரு வேலையும் இருக்காது... ஏனென்றால் பிள்ளைகள் யாரும் அந்த நேரத்தில் எழும்ப மாட்டார்கள்..

அதிக பேரிடம் காலையில் இரண்டு லிட்டரும் அந்திக்கு ஒன்றரை லிட்டரும் கரக்கும் கலப்பின மாடுகள் தான் இருக்கும்..

அந்த காலகட்டத்தில் ஒரு லிட்டர் பால் உத்தேசமாக 7 ரூபாய் இருக்கும்...

சன்னல் ஓரத்தில் இருக்கும் விளக்கெண்ணையை எடுத்து தடவிக்கொண்டு கன்னுக்குட்டியை சிறிது ஊட்டவிட்டு மடி சுரந்த பிறகு, கன்னு குட்டியை இழுத்து கட்டுவார்கள் அது ஜல்லிக்கட்டு காளையை போல் முறுக்கிக் கொண்டு வராது ...மல்லுக்கட்டி இழுத்துக் கொண்டு அதே மாடு கட்டிய அச்சில் கட்டுவார்கள்.. எனக்கு பார்க்கும்போது எல்லாம் உயிரே போகும் இப்படி கன்னு குட்டியை ஏமாற்றுகிறோமே என்று...

பிறகு ராவைக்கு கழுவி கவுத்த பால் வாலியை எடுத்து சிறிது தண்ணீரால் அலம்பிவிட்டு மாட்டு மடியையும் கழுவிய உடன் பால் கறக்க ஆரம்பிப்பார்கள்...

வெறும் சில்வர் வாலியில் மடியிலிருந்து பால் பீச்சும் சத்தத்தை.. அந்த அதிகாலை மூன்றிலிருந்து நான்கு மணி பொழுதுகளில் இளையராஜா இசை உடனே ஒப்பிட்டு பார்க்கலாம்.. அப்படி ஒரு ஆனந்தம்.

ஓசை குறைந்து கொண்டே போகும்...அந்த சத்தமே வாலியில் எவ்வளவு பால் இருக்கிறது

என்று அடுத்தவருக்கு எடுத்துச் சொல்லும்..

தேவையான பாலை கறந்துகொண்டு பிறகு கன்னு குட்டியை ஊட்ட விடுவார்கள் ஓரளவுக்கு அது பசி அடங்கும்..

ஆண்கள் பெண்கள் என அனைவரும் ஒவ்வொருவராக முச்சந்தியில் அமர்ந்து இருக்கும் பால்காரரை நோக்கி நடையை கட்டுவார்கள் ..

பெருசுகள் எல்லாம் சால்வையை போர்த்திக் கொண்டு (இங்கும்.. இக்கும்)... என கனைத்து கொண்டு ஒரு கையில் பால் வாலி இன்னொரு கையில் பால் புத்தகத்துடன் செல்வார்கள்.

காய் மூய்ன்னு ஒரே சத்தம் கேட்கும் ...

அங்கு தெரியும்யா அத்தனை சேதியும்...

காலை தாள்கள் எல்லாம் அச்சிட்டு வருவதற்கு முன்பே அனைத்து செய்திகளும் அலசப்படும்.. அரசியல், கல்யாணம், கருமாதி, ஊர் திருவிழா... புள்ளைங்க படிப்பு எல்லாம்...

அங்கே பேசக்கூடிய சில சொல்லாடல்கள்..

"ராத்திரி பூரா தூங்கலையா இந்த நா பண்ண எங்க தூங்க விட்டுச்சு லொள்ளு லொள்ளுன்னு கொளைச்சிகிட்டு...

பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு வா புள்ளு அறுக்க போவோம்...

ஆடு குட்டி போடும் என்று பார்த்தேன் ஆள் இல்லாத அப்போ எங்கேயாவது போய் குட்டி போட போகுது...

பால் கறவை குறைந்து கொண்டே வருதுயா ஏதோ மாட்டுக்கு சீக்கா இல்ல புல்லு பத்தலையா என்ன எழவுன்னு தெரியல"

ஒருபக்கம் பால்காரர் பால் அளக்க ஆரம்பிப்பார்.. வாங்கின பாலை அரை லிட்டர் குவளையில் அளந்து உள்ளே ஊற்றிக் கொள்வார் கடைசியாக வாலியில் உள்ள சொச்ச பாலை அதே அரை லிட்டர் குவளையில் அளந்து ஊத்துவார்..

அவருக்குத் தெரியும் அது 100 ஆ 200 ஆ அல்லது 300 ஆ என்று பால்நோட்டில் துல்லியமாக எழுதி இருப்பார்...

அந்த பால் நோட்டு எனப்படும் பால் புத்தகம் கதையே தனிக்கதை...

வீட்டில் பிள்ளைங்க நோட்டுப் புத்தகம் கூட அட்டை கிழிந்திருக்கும் ஆனால் அந்த

*நோட்டுக்கு போடும் அட்டை கிழியவே கிழியாது வீட்டிற்கு வரும் ஏதாவது ஒரு அழுத்தமான கல்யாண பத்திரிக்கையை அந்த பால் நோட்டிற்கு மேல் அட்டையாக போட்டு வைப்பார்கள் பால் கணக்கை குறித்து கொடுத்ததும் சரி பார்த்துக் கொண்டு வீட்டிற்கு சென்று சிலர் வீட்டு வேலையை பார்ப்பார்கள்.. சிலர் சிறிது உறக்கத்திற்கு செல்வார்கள்.... ஆனால் ஒரு குடங்கை வைக்கலை அள்ளி மாட்டு கவனையை நிரப்பிய பின்பு தான் காலையில் அடுத்த வேலைக்கு செல்வர்...*

*மாடு இல்லாதவர்கள் சிலர் ஒவ்வொருவராக அங்கு வந்து பால் வாங்கிக் கொண்டு செல்வார்கள்.. அவர்களுக்கு கொடுத்த பால் போக மீத பாலை பெரிய குவளையில் ஊற்றிக் கொண்டு அன்றைய காலைப் பொழுது கணக்கை அவருடைய முழு தாளில் குறித்துக் கொண்டு கிளம்ப முற்படுவார் அப்போதுதான் ஒருவர் ஓடி வருவார்... உடம்பு சரி இல்லை தூங்கிட்டேன் என்பார்...*

*அவரிடம் முகம் சுளிக்காமல் அந்தப் பாலையும் குவளையில் ஊற்றிக் கொண்டு கிளம்புவார் பால்காரர்..*

*அப்போதுதான் சேவலே கொக் க க்கோ எனக்கூவும்...*

*மிதிவண்டி அல்லது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அந்த பால்காரர் அருகில் உள்ள சில கிராமங்களில் பால் ஊற்றுவார்.*

*அவரது வண்டி நகர நகர அந்த காலைப் பொழுதில் இருளையும் இழுத்துக் கொண்டே செல்வார்...*

*மாடு அதிகம் இல்லாத பகுதிகளில் இதுபோல் வண்டியில் தான் பால் வாங்குவார்கள்.. மிஞ்சிய பாலை நேராக எடுத்துக் கொண்டு போய் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஒப்படைத்து காலை கணக்கை முடிப்பார்.*

*வீட்டுக்கு வரும் வழியில் மனைவி சொன்னது நினைவுக்கு வரும் காய்கறி அல்லது வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு போய் சேருவார்...*

*மணி உத்தேசமாக ஒன்பது இருக்கும் வீட்டில் குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கு சென்று இருக்கும்.. வீட்டில் மனைவியுடன் சேர்ந்து பால்குவளையை இறக்கி வைத்து விட்டு காலை உணவை முடிப்பார்.. சிறிது கூட முகத்தில் அசதி இருக்காது.. சிறிது தூங்கலாம் என்று நினைப்பார் ஆனால் முடியாது.*

*பால் காரனுக்கும் தூக்கத்துக்கும் சென்ம பக...*

*வீட்டில் யாராவது வந்து கல்யாண பத்திரிக்கை கொடுத்து இருப்பார்கள் முகூர்த்தம் 10:30 லிருந்து 11:30 இருக்கும் அதில் கலந்து கொள்ள கிளம்புவார் வேட்டியை மாற்றிக் கொண்டு..இங்கு எதையும் தவிர்க்க இயலாது..*

அல்லது அவரது மனைவி ஏதாவது ஒரு வேலை வைத்துக் கொண்டு தயாராக இருப்பார் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்.. பிள்ளைகளின் பள்ளிக்கு செல்ல வேண்டும் என ஏதாவது ஒரு வேலை இருந்து கொண்டே இருக்கும்..

அனைத்தையும் முடிப்பார்..

சிலர் வயல் வைத்து வேளாண்மை செய்து கொண்டிருப்பார்கள் இடையில் வேளாண்மையையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.... வயலுக்கு சாப்பாடு தேனீர் கொண்டு செல்ல வேண்டும்.. எங்கு சென்றாலும் ஆர அமர வேலையை முடிக்க முடியாது...

நல்லது கெட்டது என எதையும் பேச முடியாது ஒரு திருமண வீட்டுக்கு சென்றால் கூட முதல் பந்தியில் சாப்பிட்டு விட்டு அவசர அவசரமாக எழும்ப வேண்டும்..

ஏனென்றால் ஒரு மணிக்குள் வீட்டுக்கு வரவேண்டும் பால்குவளை கழுவி காய வைத்து தயாராக இருக்கும் மதிய உணவை முடித்து விட்டு பால் குவளையை எடுத்து கட்டிக் கொண்டு கிளம்புவார் மதியம் 1.30 இருக்கும் அநேகமாக..

மதியம் 2:30க்குள் அதே கிராமத்தில் அதே முச்சந்தி கட்டையில் எழுதுகோல் குறிப்பேடு கையுமாக சென்று அமர்ந்து விடுவார்,அந்த நேரத்தில் வெயில் உச்சத்தில் இருக்கும்..சுட்டு எரிக்கும்... ஆனால் அவருக்கு பழகி போன ஒன்றுதான்...

உண்ட மயக்கத்தில் உள்ள மக்களும் பிறகு சாப்பிடலாம் என வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களும் அந்திக்கு பால் கறக்க தயார் ஆவார்கள்..

படுத்து கிடக்கும் மாட்டை எழுப்பி விட்டு வழக்கம் போல் அரைகுறையாக கன்னுக்குட்டியை ஊட்டவிட்டு இழுத்து கட்டி பால் கறந்து கொண்டு முச்சந்திக்கு செல்வார்கள். அங்கு போய் பார்த்தால் பேரதிர்ச்சி.

பால் டிகிரி போட கணக்கப்பிள்ளையும் கூட வந்து இருப்பார் ( டிகிரி போடுதல் என்பது பாலின் அடர்த்தியை ஒரு கருவி மூலம் அளந்து யாரும் பாலில் தண்ணீர் கலக்கிறார்களா என கண்டுபிடிப்பது ) முதலில் சென்றவர் யாரேனும் பாலில் தண்ணீர் கலந்து இருந்தால் மாட்டிக்கொள்வார்கள்.. வாக்குவாதம் நடக்கும்...

கணக்கப்பிள்ளை சொல்லுவார் நாளையிலிருந்து பால் கொண்டு வராதீர்கள் என்று ஆனால் பால் கொண்டு வந்தவர் இளங்கன்னு குட்டி மாடு அதுதான் டிகிரி நிற்கவில்லை என்பார் ஒரு வழியாக பேச்சுவார்த்தை முடிவுக்கு வரும் அதற்குள் இந்த செய்தி காட்டுத்தீ போல் பரவும் யாரேனும் அன்று தண்ணீர் கலக்க நினைத்து இருந்தால் கூட அன்று கலக்க மாட்டார்கள்..

கணக்கப்பிள்ளை யார் மீதும் நடவடிக்கை எடுத்து நான் பார்த்ததே இல்லை...

(இன்று போல் அல்ல... அன்றைய காலகட்டத்தின் அதிகபட்ச கலப்படம் என்பது இரண்டு லிட்டர் பாலில் 300 மில்லி தண்ணீர் கலப்பது தான். தவறு தான் ஆனால் ஆரோக்கியமாக தான் வாழ்ந்தோம்)

இன்னொரு நாள் மாலை.. பணம் வாங்கும் நாள் (payment நாள்) ஒரு மாதம் முழுக்க அல்லது 20 நாட்களுக்கு ஒரு முறை கொள்முதல் செய்யப்பட்ட பாலிற்கு பணம் தருவார்கள் அதுதான் அக்காலத்தில் payment நாள் கூடவே பால்கோவாவுடன்....

கட்டுக்கதை தான் என்றாலும் தேவர்கள் கிடைந்து எடுத்த அமிர்தத்தை யாரய்யா உண்டு உள்ளீர்கள்.. அதையும் தாண்டிய சுவை இருக்கும் அந்த பால்கோவாவில்..

அதற்கான தொகையையும் பால் காசில் பிடித்துக் கொண்டு வெள்ளை காகிதத்தில் சதுரமாக மடித்து நல்ல பதத்துடன் தருவார்கள் நாங்கள் எல்லாம் பள்ளியில் இருந்து வரும் வரை அந்த பால்கோவா பிரிக்காமல் அலமாரியில் அப்படியே இருக்கும்..

நாங்கள்தான் வந்து பிரிப்போம் கையை கூட கழுவாமல் புட்டு வாயில் போடுவோம் நன்றாக திரிந்த அந்த பால்கோவா வாயில் கரைந்து ஓடும். பிறகு தான் வீட்டில் உள்ளவர்கள் சிறிது தின்று பார்ப்பார்கள்..

பால் வித்த பணம் வீட்டுக்கு வந்தால் மனுச பயலுக்கு மட்டும் கொண்டாட்டம் இல்ல.. மாடுகளுக்கும் தான்..

SKM தீவனம் ஒரு மூட்டை வந்து வீட்டில் இறங்கும். பருத்திக்கொட்டை வாங்கி வருவார்கள்.. கல்ல புண்ணாக்கு.. தேங்காய் புண்ணாக்கு.. எல்லாம் வரும். மாட்டுக்கும் மகிழ்ச்சி தான் குடும்பப் பெண்கள் வாங்கிய கைமாத்து. பிள்ளைகளின் பள்ளி செலவுகள் குடும்ப மளிகை செலவுகள் என பலவற்றையும் அந்த தொகையை வைத்து தான் முடிப்பார்கள்.. எங்கள் குடும்பம் உட்பட.

பிள்ளைகள் ஏதேனும் கேட்டால் கூட இருடா பால் காசு வரட்டும் வாங்கி தரேன் என்பார்கள். விலைவாசியும் கட்டுக்குள் தான் இருந்தது..நிம்மதியும் இருந்தது..

பால்காரரும் அந்தி பாலை எடுத்துக்கொண்டு வழக்கம் போல் கிராம கணக்கை முடித்துவிட்டு மீதி பாலை கூட்டுறவில் சேர்த்து வார வட்டிக்காரனுக்கு பங்குடு பண்ணிட்டு பிள்ளைகளுக்கு குஞ்சான் செட்டி கடையில் காராசேவும் இனிப்பு சேவும் கட்டிக்கொண்டு வீடு போய் சேருவார்..

இரவு 8 மணி இருக்கும் குவளையை இறக்கி வைத்து விட்டு சிறிது நேரம் களைப்பு ஆருவார், இரவு உணவை முடிப்பார் ,மணி 9.30 இருக்கும்.. பிள்ளைகளிடம் பேசுவார்

முழித்திருந்தால் மட்டும்..

பிறகு உறங்க செல்வார் மணி 10 இருக்கும் உத்தேசமாக.. ஐந்து மணிநேர தூக்கம் மட்டும்தான்..

பிறகு இரண்டிலிருந்து மூன்று மணிக்குள் எழுந்து வழக்கம் போல் குவளையை கட்டிக்கொண்டு காலை பால் எடுக்க சென்று விடுவார்.. அந்த பால்காரர்..

மழைக்காலங்களில் இவர் படும் துயரத்தை ஒரு தனி அத்தியாயமாகவே எழுதலாம் ..

ஆம்... பால்காரன் என்பவன் பெருந்துறவி தான்..

—

கழிமுகத்தான்,
மன்னார்குடி

---

# ஆடிப்பெருக்கு

வானம் சொரிந்த வாய்மையின் நீரே,
குன்றின் உச்சியில் குளிர்ந்து பிறந்து,
முல்லை காட்டின் முகில் தழுவி இழிந்து,
வயல் வளர் மருதத்து வளம் அது
பெருக்கி...

உழவர் உள்ளம் உவகையில் நிறைய,
நெய்தல் கடலொடு நேர்ந்து கலந்து,
பாலை வெம் நிலம் பசுமை பூத்து,
ஐந்திணை எல்லாம் ஒன்றுபடுத்தும்
தன்மையின்...

ஆடி பதினெட்டாம் நாளில் ஆறு பெருகி
ஆரவாரிக்கும் அணங்கு உடை வையை!

மகளிர் மலர் தூவி வாழ்த்த,
நீரின் புகழை நிலம் தான் போற்ற,
பொங்கும் வளமை நோக்கித் தமிழகம்
தலை வணங்கும், தன் தாயெனக்
கொண்டே.

- த. வசந்த குமரன்,
5/316, இரண்டாம் குறுக்குத் தெரு,
பொனியம்மன் கோயில் தெரு,
மேடவாக்கம், சென்னை - 600100



# சேனைத் தண்ணீர்

ஏய் தெய்வானை வேலைக்கு வருகிற நேரமாடி.

இல்லைங்க அக்கா அது வந்து வருகிற வழியில பஸ்டாப்ல பாட்டியம்மா மயங்கி விழுந்துக் கிடந்தாங்க.

அதான் பக்கத்துல இருக்கிற அரசு மருத்துவமனையில் சேர்த்திட்டு வாரேன்.

சரி சரி வேலையப்பாரு உன் கூட சேர்ந்தவளுக எல்லாம் ஆளுக்கொரு மண்வெட்டி வட்டா கடப்பாறைன்னு கொண்டு வந்திருக்காளுக.

நீ மட்டும் தூக்குச்சட்டியோட வந்திருக்க சரி சரி அந்த ஒடைமரத்துக்கு கீழ இருக்கிற குடத்தை எடுத்துக்க.

நேற்றுதான் வனத்துறையில் இருந்து முந்நூறு மரக்கன்று வந்துருக்கு பத்தடி தள்ளி தள்ளி குழி தோண்டி நடச்சொல்லி இருக்கிறேன்.

நீ எல்லா கன்றுகளுக்கும் தண்ணிய ஊத்து சரிங்கக்கா.

உச்சி வெயிலு முந்தானையை தலையில் போர்த்தி முந்தானையை பல்லால் கடித்தபடி இடுப்புல குடத்தை தூக்கிக் கொண்டு ஊத்தியபடி.

யப்பப்பா என்னா வெயிலு கோடைமழை பெஞ்சா நல்லா இருக்குமேன்னு நினைத்துக்கொண்டே பாதி மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊத்தியாச்சு.

மீதிய சாப்பிட்டுட்டு ஊத்துவோம்ன்னு ஒடமரத்துல தொங்கப்போட்டிருந்த தூக்குச்சட்டிய எடுத்து கொஞ்சோண்டு பழையக்கஞ்சிய பிழிந்து மரத்துக்கு மேலிருந்த பறவைகளுக்கு கொஞ்சம் வைத்து விட்டு தானும் சாப்பிட்டுட்டு படர்ந்த மர நிழலில் சற்று இளைப்பாறிவிட்டு மீதி மரக்கன்றுகளுக்கு தண்ணீர் முடிப்பதற்குள்.

மணி மூனு ஆகப்போகுது எல்லோரும் வாங்கடி கையெழுத்து போட்டுட்டு போங்க நாளையோடு நூறுநாள் வேலைத்திட்டம் முடிகிறது

வங்கி கணக்கில் சீக்கிரத்தில் வரவு வைக்கப்படும்.

நாளைக்கு எல்லோரும் கண்டிப்பா எல்லோரும் வரனும் தெய்வானை நாளைக்காவது நேரத்துல வந்துரு சரிங்கக்கா.

அடுத்தநாள் எல்லோரும் ஆளாளுக்கு ஒரு குடத்தை தூக்கிட்டு வேகவேகமாக தண்ணீர் ஊத்திக்கிட்டே நாளையில் இருந்து வேலை இல்லை தோட்ட வேலைக்கு யாராவது கூப்பிட்டால் போக வேண்டியதுதான்ன்னு.
ஒருத்தர் ஒருத்தரு பேசிக்கொண்டிக்கையில் தெய்வானை மட்டும் நாளையோட வேலை முடிஞ்சு

இந்த மரக்கன்றுகளுக்கெல்லாம் யார் தண்ணீர் ஊத்துவான்னு தனக்குள்ளே கேள்விக்கேட்டபடி. கடைசியாக அந்த குளத்தில் ஒரு சொட்டு கண்ணீர் சிந்தி செல்கிறாள்.

இரவில் கணவர் முத்துவேலிடம் நான்தாங்க அந்த பிஞ்சு மரக்குழந்தைகளுக்கு முதல் சேய்த்தண்ணீர் ஊத்துனேன் இப்போ நூறுநாள் வேலையும் முடிஞ்சு போச்சு.

அத்தனை கன்றுகளுக்கும் நான் ஒத்த ஆளா அவ்வளவு தூரம் சுமந்து ஊற்ற முடியும். முடியும் என்னால முடியும்னு கணவரிடம் சொல்லிக்கொண்டே உறங்குகிறாள்.

விடிந்தும் விடியாத காலை திடுக்கென விழிக்க அருகில் படுத்திருந்த முத்துவேலைக் காணவில்லை எங்கடா போனாரு இந்த மனுசன்னு வெளியே சென்று பார்க்கையில் இந்த மனுசன் வெறுங்குடத்தோடு வெள்ளனே எங்க போயிட்டு வாராரு மனசுக்குள் கேட்கவும் அருகில் நெருங்கிய முத்துவேல்.

நம்ம மரக்குழந்தைகளுக்கு இத்தோடு பத்தாவது குடம் தண்ணீர் ஊற்றிட்டு வாரேன்.

அப்ப மீதிய யாருங்க ஊத்துவா நம்ம ஊர்க்காரங்கதான் எப்படிங்க வாற வழியில நாலைந்து பேர் கேட்டாங்க எங்கப்பா வெள்ளனே குடத்தை தூக்கிட்டு எங்கப் போறான்னு நாளைய தலைமுறைகளுக்கு எந்தக் கைமாறும் கருதாமல் சுத்தமான சுவாசக் காற்றை வழங்கி விட்டு வருகிறேன் என்று சொல்லி முடிக்க.

ஆளாளுக்கு ஒரு குடத்துடன
கிளம்பிட்டாங்க
என்று சொல்லி முடிக்க
தெய்வானை இயற்கையை வணங்கி
அண்ணாந்து பார்க்கிறாள்.

ஒரு சொட்டு மழைத்துளி கண்ணத்தில் விழுந்து பூமியை நனைக்கிறது.

—

லா. பெனிஸ்,
35/C/40, தியாகி விசுவநாததாசு நகர்,
திசையன்விளை - 627657
திருநெல்வேலி மாவட்டம்.

## புதுத் துளிர்

புது துளிர் விடும் கொய்யா இலைக்கு
முதல் உணர்வை தரும்
பட்டாம்பூச்சிக்கு
யார் சொல்லிக்
கொடுத்திருப்பார்கள்...

அன்பை, விதைப்பதும்
இதுபோலொன்றிலிருந்து தான்
துவங்கியிருக்க வேண்டும் ....!

- ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# அவள்...

நீண்ட காலம் காத்திருந்த பின் என் வாழ்க்கைக்குக் கிடைத்த அழகிய பொக்கிசம் - அவள்...

கண்களில் கருநிற மையிட்டு, காந்தப் பார்வையால் என் மனதை இழுக்கும் திறன் கொண்டவள்....

என் எதிரே அவள் நிற்கும் பொழுது, உதடுகள் மௌனமாய் இருந்தாலும்... அவளின் கண்கள் மட்டும் என் கண்களுக்குள் ஊடுருவி, நான் மறைத்து வைத்திருக்கும் காதலையும் களவாடிச் செல்கின்றன...

சில நேரங்களில் அவள் பார்வையில் தொலைந்து போகிறேன்... மீண்டு வர வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல்...

காலங்கள் கடந்து, பல காத்திருப்புகளுக்குப் பிறகு எனக்குக் கிடைத்த பொக்கிசம் அவள்...

அதனால்தானோ என்னவோ...

கண்ணிமைக்கும் அந்த ஒரு நொடி கூட, என் கண்களிலிருந்து அவள் மறைந்து விடக்கூடாது என்றே என் மனம் ஆசைப்படுகிறது...

—

*S.S. கார்த்திக், DCA, DME*
உள்ளிக்கோட்டை.

---

# காதலெனும் தீவினிலே...

என்னை யாராகப்
பார்க்க விரும்புகிறாள்
என்பதில் ஒளிந்து கிடக்கிறது
உனக்குள் மையமிட்ட
அன்பின் தடங்கள்.

*அலையின் பிரியத்தில்*

அள்ளிச் செல்ல வரும் கடலுக்கும்
உன் காலடிகளைக் கண்டதும்
முத்தமிடவே
துடிக்கிறது என்னைப்போல்.

*எதுவாக வேண்டுமானாலும்*

மாறிவிட முடியுமென்றால்
எப்போதும் மாறாமல்
உன் மடியில் தவழும்
பிள்ளையாகவே
மாறிவிடுகிறேன்.

## புத்தகங்களைப் பரிசளிக்கிறாய்

எனக்குள் இருக்கும்
எழுத்துகளை
எழுப்பிவிடட்டுமென்றே.

## அகத்தில் நிறைத்து

அழகு பார்க்கிறேன்
உள்ளேயே உட்கார்த்தி
உறவு பேணுகிறேன்
எண்ணத்தில் இழைத்து
வரிகளில் நிறைக்கிறேன்
உதடுகளில் உச்சரித்து
சரி செய்து வைக்கிறேன்
வழக்கம்போலவே
உன்னைக் கண்டதும்
மௌனத்தை அள்ளிக் கொள்கிறது மனம்.

## பாறையைத் தழுவி

படம் பிடிக்க நினைக்கிறாள்.
காற்றின் தீண்டலில்
பாறையோடு ஒட்டிக் கொள்கிறது
பார்த்துக் கிடந்த
எந்தன் மனம்.

## அமைதியான குளத்தின் கரையில்

நீரை வேடிக்கை பார்த்தன
உன் விழிகள்.
மீனைத் தேடிப் பார்த்தன
கொக்கின் விழிகள்
உன்னையும் கொக்கையும்
படம் பிடிக்கிறது
என்னைப்போலவே
நீரும்.

## வாங்கித் தந்த

வலம்புரிச் சங்கினில்
கடலின் ஓசையை
கேட்கச் சொல்கிறாய்
காதில் வைத்ததும்
உன் மூச்சுக்காற்றின்
முத்தமெனக் கேட்கிறது.

## மௌனத்தை அடைகாத்த அறையின் இருப்பை

உன் நுழைதலால்
திறந்து விட்டாய்
காத்திருந்த எனக்குள் பீறிடுகின்றன
மௌனத்தின் அழுத்தங்கள்.

## மழைப் பிள்ளைக்கு

வழி விடாது
மேகக்கூடலை கலைத்து விட்ட
காற்றுக்கு
உன்னைக் கண்டதும் பேரானந்தம்
பிடித்து விடுகிறது தழுவிக் கொண்டே
அணைத்துச் செல்வதில்.

## தேக்கு மர தேகத்தை

வண்ணத்துப்பூச்சியின் சிறகுகள் எதுவும்
செய்ய முடிவதில்லை
பிறகெப்படி
உன் வருகை மட்டும்
எனக்குள் எத்தனையோ வண்ணங்களை

வரைந்து விட்டுச் செல்கிறது.

## தாய் வருகைக்கு

தவமிருக்கும்
குஞ்சுப் பறவையின்
பசியைப் போல
திருவிழா கூட்டத்தில்
திசை தொலைத்து
அம்மாவின் விரல் தேடும் பிஞ்சின்
தவிப்பை போல கொடுமணலில்
கொப்பளித்து விட்ட
கால்களை இழுத்துக் கொண்டு ஒரு துளி
நீருக்காக
உதடுகளைக் கூட்டும் அகதியைப் போல
காத்திருப்பின் அவசரம்
தெரியத் தொடங்குகிறது காதலில்
விழுந்த பின்.

—



இளையவன் சிவா,
கைபேசி: 9965359130

---

# வெந்து போன கவிதை

மண்டைக்கு மேலே அடுக்களை
தொண்டைக் குழிக்குள் சொற்கள்
இப்போது சமையல் செய்யவா
கவிதை நெய்யவா

ஊறிச்சுரக்கும் வார்த்தைகள்
ஊத்தைக்கூடைக்குள் கழுவும் உடுப்புகள்
எழுதப்பேனா எடுக்கவா
தேய்க்கச் சவர்க்காரம் எடுக்கவா

வெட்டிய மீன் சமையல் சட்டிக்குள்
வெந்தெழும் எண்ணங்கள்
நெஞ்சத்தொட்டிக்குள்

மசாலா சேர்த்துக் குழம்பு கிளறவா
மொழிகோர்த்துக் கவிதை கிளறவா

மஞ்சள்பொடியோடு சிந்தும்
சொற்களின் கறை துடைக்கிறேன்.

தாளிக்கையில் கடுகுவெடிக்க
புதுக்கவிதைச்சந்(த்)தம் கேட்கிறேன்

விரல்களோ அகப்பை பிடிக்க
விழிகளில் எழுதுகோல் ஏக்கம்
மொழிபெய்யக் கைகள் பரபரக்க
மனவலியாகி விதியோ வீணடிக்கும்

அடுப்பின் நெருப்பில் அவியும் அடிசில்
கொடுப்பினையற்ற வரிகளோ
கொதிக்கும் மனதில்

கரண்டி கிளறும் வட்டங்களில்
பிறக்காத கவிதைகள்
சுழன்று தவிக்கும்
மசாலா மணக்கும் திசையில்
மொழியின் வாசனை
மௌனமாய் அழுது கிடக்கும்

பாத்திரங்கள் ஒன்றோடொன்று
உரசிப்பேச
காகிதப்பக்கங்கள் அமைதியாகக்
காத்திருக்கும்

வீட்டின் பசியைத் தீர்ப்பேனா?
இதயத்தின் பசியைத் தணிப்பேனா?

வயிறு நிரப்பும் தட்டுகள்
உயிர் நிரப்பும் வரிகள்

யாருமற்ற இந்த அடுக்களையில்
தனியாகக் கொதிக்கிறது
என் கவிதை

இறுதியில்
பரிமாறுகிறேன்
சமையலறைப் புகையில்
வெந்து போன
ஒரு கவிதையையும்...!!

## காலத்தால் அழியாத விதி!

ஆறு பருவங்கள்
அத்தனையும் கடந்து
வயதாகி
நிறம் பெயர்ந்து
இளைத்துச் சுருங்கி
இனிமை பசுமை இழந்து
ஏழாம் பருவம் ஏற்று
இறுதியில்
பூமி தழுவும் புகலிடமென

குருத்திட்டு அரும்பாகி
துளிர்த்துத்தளிர்த்து
பச்சிலையாகிப்
பழுப்பெய்து பின்
கடைநிலை வரை எத்தனை
அனுபவங்களின் உலர்வுகள்

அங்குமிங்கும்
அலைக்கழிப்பு செய்யும் காற்றோடு
சண்டை இடச் சத்தமிடுகின்றன
ஆனாலும்
காற்றடங்க அதுவும்
அடங்கிப்போகின்றன

அந்திம காலத்தில் யாரும்
கவனிப்புப் பெறுவதில்லை என்பதற்கு
சருகொரு சாட்சி

இலையாக இருந்த போது
இளமை பசுமை கொண்டிருந்தது
காற்றின் அசைவுக்கு
இதமாகத் தலைசாய்த்தது

வயது முதிர்ந்ததும்
அறிவு முதிர்ச்சி
ஆதலால் காற்றுக்கு
எதிர்வாதம் செய்கிறது

பச்சையம் கொண்டு
பசி போக்க உதவியதில்
கொண்டாடப்பட்டன இலைகள்

பச்சையம் இல்லாததால்
இச்சை கடந்து இழிவு செய்யப்பட்டன
சருகுகள்

உருவாக்கப்பட்டது
ஒரு நோக்கத்துடன்

நோக்கம் நிறைவேறியதும்
விடுகைதான்
விரக்தி தான்
கண்ணீர்தான்
மண்ணில் புதைவதுதான்
காலத்தால் அழியாத விதி

# துயரத்தின் வேதனம்!

நல்லவர்களுக்கு துயரம்
என்பது விதிக்கப்பட்டது
நேர்மையின் மனங்களுக்கு துக்கம்
பழக்கப்பட்டது

துயரங்களும் வலிகளும் சோதனை அன்றி
சேதாரம் விளைவிப்பன அல்ல
உனக்கான பரிசுகள் அன்றித்
தண்டனையுமல்ல
உன்னைச் செதுக்கும்
உளிகளவை
உன்னைத் தகவமைக்கும் திட்டங்களவை

பாவத்தின் சம்பளம் நரகம் போல
துயரத்தின் வேதனம்
கொண்டு வரும்
சுவர்க்கத்தின் சோபனம்
தகுதியற்றன துவண்டு போகும் தகுதி
கொண்டன வெற்றி காணும்

வலிகளையும் வேதனைகளையும்
ஆகர்சியுங்கள்
அது உன்னதமெனக் கொண்டாடுங்கள்
விலக எத்தனிக்க வேண்டாம்
வலிக்கஞ்சி விசனம் கொள்ள வேண்டாம்
எதிர்த்துப் போராடுங்கள்
எல்லையற்றுப் பண்படுங்கள்
பிரகாசித்தொளிரும் உங்கள் இதயம்
பட்டை தீட்டப்படும் உள்ளங்கள்


வலி துரத்த பிரயத்தனம் கொள்
வலி தீர்த்து ஆசுவாசங்கொள்
எங்கே உன்னை ஒளித்து வைக்க?
எப்படி உன்னை உரப்படுத்த?
மிரளாதே முனங்காதே
முன்னேறு விண்ணேகு
காயங்கள் விழுங்கு
காதல் கொண்டு வலி இணங்கு

காயங்கள் எல்லாம் மாயங்கள் செய்யும்
மந்திரக்கோல்கள்
காயங்கள் யாவும் உளத்தூய்மை செய்யும்
கடலலைகள்
வெறுப்பெதற்கு?
அதைத் தடுத்தொதுக்கு
கோபக்கடுப்பெதற்கு?
அதைக் கழித்தனுப்பு

இறைவனின் கருணை
எல்லோர்க்கும் உண்டு
படைப்பினங்கள் யாவுக்கும்
சோதனைகள் உண்டு
அவனருளை நம்பு
அதுதான் உனையுயர்த்தும் துரும்பு
சக்திக்கு மேல் துயரங்கள் இல்லை
சகமாள்பவனின் வாக்கெப்போதும்
பொய்ப்பதில்லை

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# நீலமலை அணைக் "கட்டு"

நீர்தர மறுக்கும்கர் நாடகத்திற்கு
நல்ல தொருபாடம் புகட்ட
நீல மலையடி வாரத்திலே
கட்டுவோ மினிஅணை யொன்றை

பலமேடு பள்ளம் யாவும்
பாங்காய்வளைந் தோடிவரும் நீருக்காய்
கட்டுவோ மினிஅணை
யொன்றை

மனிதக் குலத்தின்நோய்
தீர்க்கும்
மூலிகை மணங் கமழும்
மருத்துவ குணமிக்க
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

தேக்கும் பாக்கும் மிகுந்த
தென்றல் வீசும்சோலை வனத்தில்
தெவிட்டா தோடிவரும்
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

பொங்கு நுரை அருவிகளை
பொறுமை யுடன்அழைத்து வரும்
பொன் னிலும்மேலான
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை யொன்றை

குயில் பாடும்இன் னிசையில்
குறுகின ஓடை யெல்லாம்
குன்றா மல்ஓடிவரும்
நீருக்காய்
கட்டுவோ மினிஅணை
யொன்றை

காவிரி காவிரி யென
கத்தி கத்திஓய்ந்தது போதும்
கட்டுவோ மினிஅணை
யொன்றை
நீல மலையடி வாரத்திலே
(பாண்டியாறு - புன்னம் புழா)

—

கவிஞர். மு. ஜெரோஷா,
திருப்பூர்.

---

# பூமிக்கு வந்த வேற்றுக்கிரகவாசி – அதன் அனுபவம்

*22 ஏப்ரல், 3120.*

அன்புள்ள நாட்குறிப்பே,

என் பெயர் ஐயானாடி. நான் பூமியிலிருந்து $9.586 \times 10^{15}$ ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஃபர்னடோ (Farnadou) என்ற கோளில் வாழும் உயிரினம். பூமியில் எங்களை வேற்றுக்கிரகவாசிகள் (Aliens) என்று

*அழைக்கிறார்கள்.*




*இன்று உலக பூமி தினம் என்பதால், பூமியையும் அதன் மக்களையும் காண நான் சென்றேன்.*

*உலக நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவில் கூடி இருந்ததால் அங்கு சென்றேன். அனைவரும் உலக பூமி தின விழாவில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்னை மலர்க்கொத்துகள் கொடுத்து அன்புடன் வரவேற்றனர்.*

*ஆனால் என்னை மிகவும் அதிர்ச்சியடையச் செய்த ஒரு விடயம் இருந்தது. எங்கு பார்த்தாலும் வானளாவிய கட்டிடங்களே இருந்தன. மரங்களைக் காணவே முடியவில்லை.*

*மனிதர்கள் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் தங்கள் வாழ்க்கையை எளிதாக்கியிருந்தாலும், செயற்கை நுண்ணறிவான AI அதிக தண்ணீரைப் பயன்படுத்துகிறது. இது தண்ணீர் பற்றாக்குறையில் முடிகிறது என்பதை மறந்துவிட்டனர்.*

*அப்போது "இங்கு ஆக்சிஜன் நிரப்பப்படும்" என்ற பலகையுடன் ஒரு மையத்தைக் கண்டேன். மக்கள் முதுகில் ஆக்சிஜன் சிலிண்டர்களை சுமந்தபடி வந்து அவற்றை நிரப்பிக் கொண்டிருந்தனர். இதைக் கண்டு நான் மிகவும் குழப்பமடைந்தேன். "மரங்களை நட்டால் இயற்கையாகவே ஆக்சிஜன் கிடைக்கும் அல்லவா?" என்று கேட்டேன்.*

*ஆனால் அவர்கள், சீனா உலகத்தியிலே மரங்கள் அதிகமாக இருக்கும் இடமாக விளங்குகிறது. 187 காடுகளை கொண்டு இந்த பட்டத்தை பெற்றது. இந்தியா பதினொன்றாம் இடத்திலும் அமெரிக்கா கடைசி இடத்திற்கும் தள்ளப்பட்டது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட (GMO) விதைகளை அதிகமாக பயன்படுத்தியதால் இயற்கை விதைகள் அழிந்துவிட்டதாகவும், மண்ணின் வளமும் குறைந்துவிட்டதாகவும் கூறினர்.*

*அதன் விளைவாக அமெரிக்கா வறண்ட நிலமாக மாறி, மக்கள் ஆக்சிசன், தண்ணீர் மற்றும் வளமான நிலத்திற்காக போராட வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.*

*அப்போது நான் மண்ணை மீண்டும் வளமாக மாற்றும் முறையையும், இயற்கை விதைகளையும் அவர்களுக்கு வழங்கினேன். இது அனைத்தும்  நடந்தது 100 ஆண்டுகளுக்கு முன்பு.*

இன்று மீண்டும் உலக பூமி தினத்தில் பூமியைச் சுற்றிப் பார்த்தபோது என் மனம் மகிழ்ச்சியடைந்தது. எங்கு பார்த்தாலும் உயரமான மரங்கள், பசுமையான காடுகள், தூய காற்று. ஆக்சிசன் உருளைகளும் இல்லை; ஆக்சிசன் நிரப்பும் மையங்களும் இல்லை.

இயற்கையை காத்த மனிதர்கள், தங்கள் எதிர்காலத்தையும் காப்பாற்றியிருந்தார்கள்.

இந்த உலகின் தலைசிறந்த தொழில்நுட்பம் இயற்கையே. அந்த உண்மையை புரிந்துகொண்ட மனிதகுலம் ஒருபோதும் அதை மறந்துவிடாதிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

- ஜயானாடி

—

செ. ஹரிதா,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா,
மன்னார்குடி.



---

# தமிழ் கவிதையின் சக்கரவர்த்தி

எட்டையபுரத்தின் கவிராயர்
காளியை காவல் செய்ய அழைத்த
காலமேகம்
நாடு என்னும் தேனை செவிக்கு ஈந்தவன்
செந்தனில் இறையை உணர்ந்தவன்
ரௌத்திரம் பழகச் சொன்னவன்
சுப்பையா என்கின்ற முண்டாசுக் கவி
பாரதி.

அவன் பார்வையில் புவி அத்தனையும்
பூபாலம் பாடும்.
அறிந்த மொழிகள் சில அளித்த
கவிதைகள் பல பல.

தமிழின் பழமையை தோண்டி
எடுத்தவன் தொன்மையை
அகழ்வாராய்வு செய்தவன்.
கம்பன் வள்ளுவனை போற்றச்
சொன்னவன் அவன் பார்வையில் எப்படி
எப்படி நான் நான்...

சிந்தித்தேன் சிந்தனைக்கு
அப்பாற்பட்டவனே.

வணங்குகிறேன்
எனக்குத் தெரிந்ததை வாசிக்கிறேன்.

பொல்லா

புழுவினைப் போல் வாழாமல்
எல்லாரும் எல்லாமும் பெற நிமிர்ந்து நில்
குன்றென நிமிர்ந்து நில்.

பேயாய் உழலும் சிறுமனமின்றி தாயாய்
வாழும் பெருமணம் கொண்டு நிமிர்ந்த
நில்...

வான் உயர பறக்கும் புள்ளினம் போல்
மண்ணில் தெரியும் சிம்மம் போல்
நிமிர்ந்து நில்...

பொய்யுரு மாயையை போற்றி விட்ட
பொழுது
செய்யுற நற் காரியம் செய்வதில் நிமிர்ந்து
நில்...

தொடர் முயற்சி செயலுக்கு கொண்டு
வெற்றி வானில் கற்றுத் தெளிந்த பின்
கூவ நிமிர்ந்து நில்...

கடலின் அலையும் கதிரின் சுடரும்
அடங்காதது போல் உடலின் உறுதியும்
உயிரின் ஆழமும் அடக்காது நிமிர்ந்து
நில்...

மதிக்கொன்று செல்வம் சேர்ப்போர் வழி
மறந்து விதி விதி சொல்லாது
நிமிர்ந்து நில்...

நிந்தை செய்து நிறைவஞ்சனை பேசி
வரும் மா க்களிடம் சிந்தை தெளிந்து
பேச நிமிர்ந்து நில்...

கண்கள் இரண்டும் பிறர் மனம் பாராது
மண் கல்போல் வாழ்வோரை கண்டதும்
நிமிர்ந்து நில்...

அறமற்ற சூழலில் அறம் கொண்டு
வாழ்வோரை திறமற்ற மா க்கள் வீழ்த்தும்
போது நிமிர்ந்து நில்...

அச்சமும் அடிமைச்சிறுமதியும் ஏற்று
ஊழல் வோர் உச்சமென்று ஆடுபவரைக்
கண்டு நிமிர்ந்து நில்...

இனம் மதம் பேசி கீழ்மையை சுவாசித்து
மனமின்றி வாழும் கூட்டம் கண்டு
நிமிர்ந்து நில்...

உள்ளம் உரம் கொண்டு உறுதி செயல்
கண்டு அள்ளும் உயரம் தொட நிமிர்ந்து
நில்
விதையினிலே விருச்சம் உழைப்பினிலே
உயரம் நம்பிக்கை நாயக/ நாயகியே
நிமிர்ந்து நில்...

வன்மை கண்டு அடங்க மறுப்போம்
திண்மை கொண்டு எழுந்து நிற்போம்
நாம் குன்றென எழுந்து நிற்போம்.

- கவிஞர் விண்மீன்,
சென்னை,
கைப்பேசி: 9941390563

# அதுவரையிலும்

என் அகராதியில்
அவை ஆதிக்கம் பிடித்த
சரியான அகராதி...

உன் மொழியுதிர்த்தலில் தான்
அழகியலின் அர்த்தம்
உணர்கிறேன்
"ஏய்"க்கும் "டீ"க்கும்

## கொடும் வறியவனுக்கும்

மிதமிஞ்சிய பணக்காரனுக்கும்
ஒரே கேள்வி தான்

"என்ன செய்யறது?"

## அடிவயிறு முட்டிக் கொண்டிருக்க

ஒட்டிக் கொண்டிருக்கும்
அவசர அவஸ்தைகளை
இறக்கி வைக்க

இருப்பிடம் தேடி
அலையும் அவளிடம்
நாடோடிகளின் சாயல்

## ரசமிழந்த கண்ணாடியும்

அப்பா இல்லாத வீடும்
ஒன்று தான்
மதிப்பிழந்தவைகள்

## கவலைகள்

உறைய வைப்பதும்,
அன்பு
அவற்றை உருக வைப்பதும் -

சிறப்பு...
சரியான போட்டிதான்!

—

பி. ஹேமா,
முசிறி.



# என் முதல் முதல் கண் நீயே

நான் செய்யும் எல்லா குரும்புகளிலும்
ரசிக்கிறியே
நான் தரும் வலியிலும் நீயோ
சிரிக்கிறியே
நான் வளர்ந்தவள் போல தெரிந்தாலும்
உன் கண்ணில் நானும் ஒரு குழந்தையே

நீ இல்லாமல் நானும் இல்லை அம்மா...

அடிதடி கொடுத்தாயே
ஆனா காயத்திலும் உன் பாசம் தானே
நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தை
என்னை முன்னேற்றுதே
நான்அழுத போது நீயே
சிரிக்கவைத்தாயே
நீ சிரிச்சா என் வலியும் தானாக ஓடிப்
போகுமே




நீ இல்லாமல் நானும் இல்லை அம்மா...

என் முதல் ஆசான் நீ அம்மா

சின்னசின்ன தோல்வியில் தாங்க முடியாமல்
நான் உடைந்து போன வேளையிலும் - அமைதியாக
"இதை கடந்து போ" என்று சொல்லி
என் நடுங்கும் உள்ளத்துக்கு துணை நின்றது - உன் கை
நான் மாறி மாறி விழுந்தாலும்...

என்னை மீண்டும் நிறுத்தும் சக்தி நீயே
நான் எல்லாமாக காரணம் நீயே
நீ இல்லாமல் நானும் இல்லை அம்மா...

ஒரு வீரத்தாய் நீ அம்மா.



- செ. நிகிதா,
7ம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா,
மன்னார்குடி.

---

# நீர்நிலை

வண்ணங்களோடு விழும் பிம்பத்தை
பட்டாம்பூச்சி என்கிறேன்

நீயோ நிறமற்ற நிழலை
கூட்டுப்புழு என்கிறாய்

பிம்பம் என்பது நிழலின்
வளர்சிதை அல்லது
வளர்உரு மாற்றம்

முடி முதல் அடி
கேசாதிபாதமாக
பார்த்த உன்னை
அடி முதல் முடி
பாதாதிகேசமாக
பார்க்கச் சொல்கிறது
நீரிலே விழும்
நினது பிம்பம்

நீரைப்போல கண்ணாடிக்கு
பிடிக்கத் தெரிவதில்லை பிம்பத்தை
தலைகீழாக.

- மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102.

# சுயநலம்

காதல் வந்தால்
முகத்தை அழகாக
அலங்கரித்துக் கொள்கிறார்கள்
உனக்கோ
முகமே இல்லை

வெள்ளையாக மாற
பூச்சு பூசுகிறார்கள்
உனக்கோ
வண்ணமே இல்லை

நடந்து
உடற்பயிற்சிகள் செய்து
உடலைக்
கட்டுக் கோப்பாக
வைத்துக் கொள்கிறார்கள்
உனக்கோ
உருவமே இல்லை

ஆனால்
உன் காதல்
எவ்வளவு அதீதமானது

அத்தனை
இலைகளையும்
வருடிக் கொண்டே இருக்கிறாய்

பூக்களையும்
உச்சி முகர்கிறாய்

பயிர்களையும்
மலைகளையும்
கட்டியணைக்கிறாய்

குளிர் முத்தத்தால்
மேகங்களைக் குளிர்வித்து
மழையாகப்
பொழியச் செய்கிறாய்

புத்தகத்தின்
பக்கங்களையும்
அன்பின் மிகுதியால்
புரட்டி புரட்டி
எடுக்கிறாய்

இளமையிடம்
காதலும் கூடலும் கொள்ளும்
காற்றே!
முதுமையில்
கழுத்தை அறுத்து
உயிரைப் பறித்து விடுகிறாயே!
உயிர் பிரிந்தும்
கோபம் கொள்ளாமல்
உன் பின்னே
பயணிக்கின்றன
சருகுகள்

உனக்கும்
மனிதனுக்கும்
என்ன வித்தியாசம்?
ஒன்றுமில்லை.

## அழகான வீடு

பூக்கள்
பூத்துக் குலுங்குகின்றன

மரங்கள்
கிளைகள் பரப்பி
கைகுலுக்கின்றன

வளைந்து
வானை நோக்கி
ஓடும் பச்சை ஆறு போல்
கொடிகள்
மரங்களில் ஏறுகின்றன

குயில்கள் கூவுகின்றன
காக்கைகள் கரைகின்றன

மற்றுமொரு
கடவுளின் தூதுவரை காக்க
சிலந்திகள்
வலைப் பின்னுகின்றன

முற்றத்தில்
முகம் பார்க்கிறது
நிலா

பாழடைந்த வீடு என
மனிதன் வராததால்
இவைகளுக்கோ திகழ்ந்தது
அழகாய் இவ்வீடு

—

சா.கா. பாரதி ராஜா,
மனை எண் 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732



# லாபகரமான புன்னகை

மயிலிறகை புத்தகத்துக்குள் வைத்து
குட்டிபோடுமென்று திறந்து திறந்து
பார்த்த நாட்களில் ஏமாற்றங்களில்லை...

கொக்கே கொக்கே எனக்கொரு
பூப்போடு என்று வானத்தைப் பார்த்து
விரல் நீட்டிய நாட்களில் பூ
விழுகவில்லை என்று
வருத்தங்களில்லை...

ரணகள்ளியை கட்டிப்போட்டு
குட்டிபோடுமா என்று எடுத்து எடுத்து
பார்த்த நாட்களில் சலிப்பேதும்
வந்ததில்லை...

மூளைக்குள் அறிவு
பூக்கும் வரை
முட்டாள்த்தனத்திலும்
தோல்வியிலும் மகிழ்ச்சி இருந்தது...

ஞானப்பூதம் புகுந்துவிட்ட நாட்களில்
தான்
சிரிப்பதற்குக்கூட
லாபமான
காரணங்களைத் தேடத்
தொடங்கிவிட்டோம்...

- நேசன் மகதி

# சாதிய ஆணவ படுகொலை

சாதிய சமத்துவம் நாடெங்கும்
சாதிய மதத்துவம் நாடுடெங்கும்
ஆவணம் இல்லா சாதிய சொல்
ஆவணம் படுத்தப்படும் சாதிய முள்

அறிவில்லா மானிடப் பிறப்பே
ஆராய்ந்து சொல்
யாருக்கு இந்த வில் நீ அறிந்து விசாரணை சொல்
பிறப்புக்கும் இறப்புக்கும் உன் கூற்றை
சொல் அது நாற்றை கொள்

இது யாருடைய ஒப்பனை அது வே உன் கற்பனை
கல்லுக்கும் காட்சி உண்டு அதை
கண்ட மனிதனுக்கும் சாட்சி உண்டு
இந்தக் காதல் குற்றம் இல்லை அது முற்றும்

இந்தக் காதல் சாதியை வென்ற கல்
இது கல்லறை அல்ல
அடுத்த தலைமுறையின் சாதி இல்லா
அடுத்த தலைமுறையின் சாலை இது

சாகப் பிறந்த மனித சாதி எங்கு வந்தது
ஏன் வந்தது எப்படி வந்து எதனால்
வந்தது எதற்காக வந்தது ஏன் இந்த
குற்றப் பின்னணி உன் சாதியே முட்டாள் பின்னணி

நன்கு அறிந்து கொள் உன் வாழ்க்கையில்
தெரிந்து கொள்

ஆறறிவு ஆசான் நீ அறிவில்லாமல்
பேசும் நீ

தலைமுறை கடந்தும் தடம் மறந்தும்
தடைகள் நீ செய்வது என்ன
வாழ்வதென்ன...!!

என் காதலே காலம் வெல்லும் காலம்
கொள்ளும் அது அன்றை சொல்லும!!

— கவிஞர் ம. செல்லமுத்து, எம்.ஏ, பி எட்.

பெரம்பலூர் மாவட்டம்




ஓவியம்:
**மா. நிரல்யா,**
**மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.**

# சாதனையளானாய்...

ஒ வெ செ
ஆரம்ப பள்ளி
மானாமதுரையில்
ஐந்தாம் வகுப்பு
படிக்கையில்

ஊரின்
கதாநாயக
திருவிழாவான
சித்திரை திருவிழா
காலங்களில்
பள்ளி வேலை நாளாய்
இருக்கையில்

சகா ஒருவன்
இரவு திருவிழாவுக்கு
மதியம் தயாராகிக்கொண்டிருக்கும்
மேடை அருகே
பள்ளிக்கு மட்டம்
போட்டு
சுற்றிக்கொண்டிருக்கையில்

ஆசிரியர்
அறிந்து
என்னையும்
வேறு ஒரு மாணவனையும்
அழைத்து வா
என கட்டளையிட

நாங்கள்
காவல்துறையாய்
எண்ணம் கொண்டு
செயலில் இறங்க
அவனோ

எங்களை கண்டு
விரைந்து ஓட்டம் எடுக்க

நாங்களும்
அதே அளவில்
வேகம் எடுத்து
பிடித்து
அவனை மீண்டும்
பள்ளியில் சேர்த்த
பொழுதுகள்

சாதனையளானாய்
யோசித்த
மனது..

# பேசிக்கொள்வது என்றால்..

நேற்றைய மகிழ்ச்சிகளை

இன்றைய வெற்றிகளை

நாளைய
நம்பிக்கைகளை

சுற்றி நடக்கின்ற
நகைச்சுவைகளை

தினம் நடக்கின்ற
சாதனைகளை

காணுகின்ற
மனிதாபிமானத்தை

புத்துணர்ச்சி தருகின்ற
பொழுது போக்குகளை

பேசிக்கொள்வோம்

அது சரியில்லை
இது தப்பு
அவருக்கு தகுதியில்லை
இவர் பார்வையே சரியில்லை
அவர் நடத்தையில்
சந்தேகமாய் உள்ளது

என்று உபயோகமில்லாத
மனதை பாழாக்கும்
பேச்சு வேண்டாம்.

## இது எல்லாம்...

படி ஏறுகையில்
கைப்பிடியை பிடிப்பது

கூட்டத்தை கண்டால்
ஒதுங்குவது

எண்ணெய் இனிப்பு
தவிர்ப்பது

இரவு பத்தென்றால்
தூக்க உறவு ஆக்குவது

அது ஒரு காலம்
என உதட்டுமொழியாக்குவது

இரயில் பயணங்களிவ்
கீழ் படுக்கை வேண்டுவது

உடல்நலமின்மை அத்தனையும்
சிக்கலோ என பயமாவது

யாராடோவது பேச
ஏங்குவது

தனித்த பொழுகளில்
நினைவுகளை அசைபோடுவது

வயதாகி கொண்டிருக்கிறது
என சொல்கிறது...

## உன்னைப்போல்

எண்ணத்திற்கும்
செயலுக்குமான உரையாடலில்

எண்ணம் கேட்டது
ஏன் என்னைப்போல்
உன்னிடம் 'வேகம்' இல்லை என்று

பதில் செயலிமிடருந்து
உன்னால் இது
'வேண்டும்
'நடக்கணும்' என்று
சொல்ல மட்டும் முடியும்

ஆனால்
நீ சொனனதை நடைமுறைப்படுத்த
என்னை நிருப்பிக்க வேண்டும்

ஆதலால்
'உன்னைப் போல் வேகம் இல்லை ...

## அறிகுறிகள்

கொட்டிக்கொண்டிருக்கும் கண்ணிருக்கு
'ரணமாகி போன மனம்

முக மலர்ச்சிக்கு
'நினைத்தை அடைந்த சந்தோஷம்'

பேசாதவர்கள் பேசினால்
'காரியம் ஆக வைண்டிய காரணம்'

பேசுபவர்கள் மௌனமானால்
'நம் பேச்சின்/செயலின் கோபம்'.

## அவையின் பொறாமையாய்

நீங்க மட்டும் தினமும்
வேலை செய்யும் இடத்துக்கு
ஆனா
நான்
வார நாளின் முதல் நாளிலும்
இறுதி நாளிலும் மட்டும்
வார வாரம் செய்பணியில்
இருப்பவர் சொந்தமண்
செல்பவர் நோக்கி
பயணப்பை...

## ஏக்கப்பார்வைகள்...

ஒ வெ செ ஆரம்பபள்ளி
மானாமதுரை
படிக்கையில்

துணிப்பையில்
பாடப்புத்தகம்
சுமந்தவனாய்
நானும்

அலுமினியப்பெட்டியில்
சக மாணவனும்

கைகரும்பலகைக்கான
எழுது பொருள்
என் சட்டைப்பையிலும்

அதற்கான
டப்பாவில்
சக மாணவனும்

இடைவேளையில்
தண்ணீர் குடிக்க
நீண்ட வரிசையில்
நானும்

தனக்கென
பாட்டில் கொண்டு
சுகவாசியாய்
நீர் அருந்தும்
சக மாணவனும்

எப்போதாவது
திரைப்படம் பார்ப்பவனாய்
நானும்
அடிக்கடி
படம் பார்த்து
காட்சி விவரிப்பவனாய்
சக மாணவனும்..

## என்றால்...

யோசிப்பு என்றால்
நம்பிக்கை

எண்ணம் என்றால்
தெளிவு

செயல்பாடு என்றால்

வெற்றி

வெற்றி என்றால்
ஊக்கம்

தோல்வி என்றால்
மீண்டும் முயற்சி

பேச்சு என்றால்
தயாரிப்பு

உணவு என்றால்
ரசனையோடு உண்ணல்

உறவுகள் சகாக்களோடு பேச்சு என்றால்
அரட்டை

கடுமையான உழைப்பு என்றால்
ஓய்வு

செய் பணிமுடிந்தது
என்றால்
பொழுது போக்கு

தனித்து தெரியும் வேண்டும் என்றால்
தனக்கே உரிய
திறமை வெளிப்படுத்துதல்

பிறரின் சாதனை என்றால்
பாராட்டு

பிறரின் கஷ்டம் என்றால்
உதவுதல்

பிறரின் வேதனைக்கு
ஆறுதல்

என
நினைவுகள்
இன்றையவைகள்
கனவுகள்
எல்லாவற்றிலும்
மானுடம்
காலங்காலமாய்
ஏன் வரும் காலத்திலும்
விரும்பப்போவது..

## எண்கள் இல்லா கணிதம்...

விருப்பத்தையும், நம்பிக்கையையும்
கூட்டிக்கொண்டே போனால்
வாழ்க்கை மீது பிடிப்பு

குறைகளையும், பலவீனங்களையும்
கழித்து கொண்டே வந்தால்
செயல்பாட்டில் வெற்றி

திறமையும், முயற்சியையும்
பெருக்கிக்கொண்டே இருந்தால்
வாழ்க்கையில் நிறைவு

பொறாமையும், அவசரத்தையும்
வகுத்து கொண்டே இருந்தால்
வாழ்நாள் முழுவதும்
மன அமைதி...

## மற்றும் ஒரு...

செயல்களுக்கு
யோசனை தேவை தான்...
வலமா, இடமா
அப்படியா, இப்படியா
என எண்ணி கொண்டே இருந்தால்...

அது மற்றும் ஒரு
பகல் கனவு தான்...

## அது அப்புறம்..

சிந்தனையும்
செயல்பாடும்
சிறப்பானதா?

மற்றவர்களால்
அங்கீகரிக்கப்படுமா?

கேள்விகள்
அப்புறம்

முதலில்
கவனம்
துல்லியத்தால்
கிடைக்கும்
தன் திருப்தியில்
இருக்கட்டும்...

## அது எல்லாம் இருக்கட்டும்...

சந்தித்த
சவால்களை

சாதித்த
கதையை

முயன்ற
விதத்தை

விரும்பியது
கிடைத்ததை

எண்ணியது
கிடைத்தை

அறிந்த
புதியவற்றை

வியப்பூட்டும்
விடயங்களை

அந்த கணத்து
உணர்வோடு

உதட்டு மொழியால்
விவரிக்க முற்படுகையில்

அது எல்லாம் இருக்கட்டும்

நான் சொன்னது
முடித்தாயா
இல்லை எனில்
ஏன்
எப்போது
செய்யப்போகிறாய்

எனக்கு என் பணி
முக்கியம்
அதற்கு பிறகு
உன் கதை கேட்கிறேன்
என்றால்

சொல்ல வந்தவருக்கு
அந்த உணர்வுகள்
காணாமால் போய்

கேட்டவர் மேல்

வெறுப்புத்தான்
வரும்...

## அவர்களுக்குப் பதில்..

தடுமாற்றத்தில் இருப்பவர்களுக்கு
'அப்பவே சொன்னனே'
என்பதற்கு பதில்
'மீண்டு வர யோசனைகள்'

தன்னை விட கீழ் நிலை
ஊழியர்களைப்பார்த்து
'எல்லாம் எனக்கு தெரியும்'
என்பதற்கு பதில்
'உன் கருத்தை சொல்'

விவாதங்களின் போது
'நான் சொல்வது தான் சரி'
என்பதற்கு பதில்
'நீ சொல் யோசிக்கிறேன்'

சிரமப்படுபவர்களைப் பார்த்து
'எனக்கு உதவி செய்ய ஆசை தான்'
என்பதற்கு பதில்
'முடிந்த உதவி செய்தல்'..

## முன்னவராய்...

அடுத்து
அந்த முன்னெடுப்பா
இந்த பணியா

நேற்றைய இழப்புக்கு
வருத்தமா

இன்றைய வெற்றிக்கு
உவகையா

நாளையவை பற்றிய
நம்பிக்கையா
பய பதற்றங்களா

இலக்குகள் பற்றிய
யோசனையா

என அங்குமிங்கும்
அலைபாய்ந்து கொண்டிருக்கும்
மனதை நெறிப்படுத்த

நமக்கானவர்களான
உறவுகளிடமும்
தோழமைகளிடமும்
ஆலோசனை தராளமாய்
கேட்கலாம்

ஆனால்
முன்னவராய்
வந்து

எதற்கு
முன்னுரிமை
எது
அவசர அவசியம்
பலத்தை கூட்டு
பலவீனத்தை கழி
நிதானமாய் இரு
என சொல்ல வேண்டியது
'தன்புத்தி'

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# கவிதை நொட்டுவது

ஓர் ஓவியத்தைக்
கிறுக்கிப் பார்ப்பது போல
ஒரு கவிதையைக்
கிறுக்கிப் பார்க்க
முடிவதில்லை

இது மற்றவர் கவிதை
என்பதை
மரம் ஏறிப் பார்த்தா
தெரிய வேண்டும்
நிழல் போதுமே

மலையை
மலை என்றே நம்புதல்
ஒரு நல்ல கவிதைக்கு
விதை கிடைத்தாற் போல

கவிதையை
எழுதியே தீர வேண்டும்
என்றில்லை
கண்ணாடி பார்க்காத
நாளிலும்
முகம் இருக்கும்

மழை வந்தால்
ஓடி வந்து
கவிதை நொட்டுவது
நின்று விட்டது
தகர கதவை இழுத்து விட்டு
உள்ளே மழைநீர் நுழையுமா
எனப் பார்த்தவன் தான்
நினைவில் சொட்டுகிறான்

கவிதை பருக
கோப்பை முனங்கும்
சூடு சொரணையற்ற தவம்

## கேள்விகளுக்கும் றெக்கை இருக்கிறது

இராஜாவும் பாலுவும்
மனோவும் மலேசியாவும்
இல்லாத
இவ்வாழ்வுக்கு
என்ன குரல் இருந்திருக்கும்

கொய்யா மர
கிளைகளற்ற
ஒரு விடுமுறையை
என் கால்கள்
எப்படி அசைத்திருக்கும்

என் துள்ளோட்டம் இல்லாத
புல்வெளி சறுக்குகள்
தேயிலை குறுக்குகள்
வனம் நடுவே
வரம் எப்படி
வாங்கி இருக்கும்

சூட மரத்தடியே
சோடிப் பூக்கள் பற்றி நிற்கும்
ரப்பர் பாவாடைக்காரியை
ரோசி சுருளிக்கு
அறிமுகப் படுத்தாமல்
போயிருந்தால்
அவ்வோவியம்
காலத்தில்
எப்படி பதிந்திருக்கும்

## எழுத்து

தொடையில்
கார்க் பட்டதிலிருந்து
கிரிக்கெட்டை கை விட்டேன்
பெருவிரல் பெயர்ந்ததிலிருந்து
கால்பந்தை
கழற்றி விட்டேன்
சில்லு மூக்கை சிவபாலன்
உடைத்ததிலிருந்து
கபடியைக்
காணவும் மறந்தேன்
முட்டி சுளுக்குக்குப் பிறகு
ஓட்டப்பந்தயம் நின்று விட்டது
வலது கை மூட்டு
கழண்டதில் இருந்து
கராத்தே கழன்று கொண்டது
உயிர் நசுங்கி
இதயம் கிழிந்து
மூளை கசிந்து
மூச்சு வாங்கிக்
கொண்டிருக்கிறது
விடவில்லையே எழுதுவதை.

- கவிஜி

---

# மாண்புவளர் நெஞ்சத்தில் வெண்ணிலாவே!

பாவகை: வெண்ணிலாச் சிந்து

மாண்பற்றோர் நெஞ்சத்தில்
வெண்ணிலாவே- என்றும்
மாண்புவளரச் செய்திடுவாய்
வெண்ணிலாவே!

நல்லோர்கள் வாழ்வுதனில்
வெண்ணிலாவே- நிலையாய்
நல்லவையே நடந்திடுமே
வெண்ணிலாவே!

கற்றோர்கள் வாழ்வுதனை
வெண்ணிலாவே - நன்றே
கற்றிடவும் செய்திடுவாய்
வெண்ணிலாவே!

பெற்றோர்கள் சொல்லினிலே
வெண்ணிலாவே - என்றும்
பெற்றிடுவோம் நற்பெயரை
வெண்ணிலாவே!

நற்குணத்தால் என்றென்றும்
வெண்ணிலாவே- உலகில்
நற்செயலே ஓங்கிடுமே வெண்ணிலாவே!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.